DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2025

Prosecution PW - 31

| Name | Suresh | Occupation |
|---|---|---|
| Husband/Father Name | Jayaraman | Village |
| Taluk | | Age |
| Date | 14.08.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A10 present.

முதல் விசாரணை

நான் ஆலிவாய்க்காலில் குடியிருந்து துபாயில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இறந்து போன ஜெயகுமார் எனக்கு அண்ணன் முறை. எவ்வாறு இறந்தார் என்று தெரியாது. அ.சா. 1 என் மாமா. அ.சா. 2யை தெரியாது. அ.சா.5 என் சித்தி. சுமார் 1வருடத்திற்கு முன்பு தஞ்சாவூரில் இருந்து மதியம் 1.00 மணியளவில் Indica காரில் நானும், சுரேஷ், ராஜகுமாரி, பாஸ்கர், பிரவின்குமார் ஆகியோர் பசுபதி கோயில் நோக்கி வந்தோம். பசுபதி கோயில் மெயின்ரோட்டிற்கு சுமார் மதியம் 2.00 மணி இருக்கும். அய்யம்பேட்டை பசுபதி கோயில் மெயின் ரோட்டில் கூட்டமாக இருந்தது. நாங்கள் இறங்கி பார்த்துவிட்டு காரை எடுத்துக்கொண்டு தஞ்சாவூர் வந்துவிட்டோம். என்னை யாரும் அடிக்கவில்லை. எனக்கு காயமும் ஏற்படவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

குறுக்கு விசாரணை அரசு தரப்பில்

போலிசார் விசாரணையில், கடந்த ஊராட்சி மன்ற தேர்தலில் அசா3 துணை தலைவருக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்றும், எங்கள் ஊரை சேர்ந்த பாபு என்பவர் தோற்றதால் என் அண்ணன் மீது பாபு உறவினர் கோபத்தில் இருந்து வந்தார்கள் என்றும் பாபு உறவினர் அழகேசன் என்பவரின் அக்கா மகள் சாந்தியை என் அண்ணன் மூலம் தில்லைஸ்தானம் மடத்தில் வேலைக்கு சேர்த்துவிட்டார்கள் என்றும் அசா 3 தேர்தலில் வெற்றி பெற்றதும் சாந்தியை வேலைக்கு சேர்த்தலிருந்தும் என் அண்ணன் அசா1ற்கும், சாந்திக்கும் தவறான தொடர்பு இருப்பதாக அழகேசன் அசா1டம் அடிக்கடி குடி போதையில் பிரச்சனை செய்தார் என்றும் 31.03.2024ம் தேதி அசா1ம் என் அண்ணனின் குடும்பத்தாரும், தஞ்சாவூரில் வீட்டில் இருந்தபோது அசா1ன் வீட்டில் இருந்த கேமிராவை யாரோ உடைத்துவிட்டார்கள் என்று புகார் கொடுக்க என் அண்ணன் முறை இறந்துபோன ஜெயகுமாருக்கு

சொந்தமான காரில் பாஸ்கர்  என் அண்ணன், அண்ணி ஆகியோரும் மற்றொரு காரில் ரமேஷ், ஜெயகுமார் ஆகியோரரும் மற்றொரு காரிலும், பிரவீன்குமார்,பாஸ்கர், நானும்  ராஜேஸ்வரி ஆகியோர் சுரேஷ் காரிலும் 1.04.2024ம்தேதி  மாலை 5.00 மணிக்கு பசுபதி கோவில் மெயின் ரோட்டில் உள்ள VAO அலுவலகம் வந்தபோது காளியம்மன் கோவிலை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மகன் விஜயேந்திரன் இருசக்கர வாகனம் ஓட்ட அவரது பின்னால் அழகேசன் அமர்ந்திருக்க நாங்கள் வந்த காரை வழிமறைத்து மறித்து நிறுத்தி இருவரும் ரோட்டில் ஓரத்தில் இருந்த மூங்கில் கம்பை எடுத்து கார் கண்ணாடியை உடைத்தார்கள் என்றும அப்போது அங்கிருந்த கார்த்திக், சதாசிவம், சந்தோஷ்குமார், சரண்ராஜ், முத்து என்கிற முத்துராஜ் ஆகியோர்கள் ஆளுக்கொரு கட்டையை எடுத்துகொண்டு அழகேசன் மற்றும் விஜயேந்திரனுடன் சேர்ந்தது கார் கண்ணாடிய அடித்து உடைததார்கள் என்றும் அழகேசன் என் அண்ணனை பார்த்து தகாத வார்த்தையால்  போலிசுக்கா போற என்று திட்டி கொண்டே உன்னை கொல்லாமல் விடகூடாது என்று அடித்து கொல்லுங்கடா என்று சொல்லி அழகேசன், கார்த்திக், சந்தோஷ்குமார், சரண்ராஜ், சதாசிவம்,முத்துராஜ், விஜயேந்திரன், மனோகரன், ராஜ்வ்காந்தி ஆகியோர் காரில் இருந்த என் அண்ணனின் வலது கையிலும் முதுகிலும் அடித்து வெளியே இழுக்க முயற்சித்தார்கள் என்றும் இதனை பார்த்த பிரவீன்குமார், பாஸ்கர், நானும் ஜெயகுமார், ராஜேஸ்வரி, என் அம்மாவையும், மற்றும் பிரவீன்குமாரும் தடுக்க வந்தபோதும் ஜெயகுமாரை அழகேசன் கட்டையால் மண்டையில் அடித்தும் , கார்த்திக் கட்டையால் நெத்தியில் அடித்து இழுத்து சென்றார் என்றும் சந்தோஷ்குமார் மற்றும் சரண்ராஜ் பிடித்துகொள்ள முத்து என்கிற முத்து ராஜ், அழகேசன், கார்த்திக் ஆகியோர் ஜெயகுமாரை கன்னத்தில் மாறி மாறி அடித்து தடுக்கவா வர என்று சொல்லி மாறி மாறி அடித்தார்கள் என்றும் என் அண்ணனை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார்கள் என்றும் அதை தடுக்க வந்த பிரவீன்குமாரை முத்து என்கிற முத்துராஜ், சரண்ராஜ், சந்தோஷ்குமார் ஆகியோர் இழுத்து சென்று அவர்களது முகத்திலும், தலையிலும் அடித்ததும் கீழே விழுந்துவிட்டார்கள் என்றும் ஜெயகுமாரை அழகேசன், கார்த்திக், சந்தோஷ்குமார், சரண்ராஜ், முத்து என்கிற முத்துராஜ் ஆகியோர் கையாலும் கட்டையாலும் மாறி மாறி அடித்து கீழே விழுந்தவரை முகத்திலும் கழுத்திலும் காலால் உதைத்தார்கள் என்றும் ஜெயகுமார் மயக்க நிலையில் இருந்தார் என்றும், அழகேசன், விஜயேந்திரன், கார்த்திக், சந்தோஷ்குமார், சரண்ராஜ், முத்துராஜ், சதாசிவம் ஆகியோர்  என் அண்ணனை அடித்து காரில் இருந்து அடித்து வெளியே இழுத்தபோது என்னையும், என் அம்மா தமிழரசி, என் அண்ணி,  தடுத்தபோது அழகேசன் மற்றும் முத்து என்கிற முத்துராஜ் ஆகியோர் அவர்களது கன்னத்தில் அடித்தார்கள் என்றும், என்னையும், சந்தோஷ்குமார் மற்றும் சரண்ராஜ் இருவரும் கையால் கன்னத்தில் அறைந்தும், வயிற்றில் குத்தினார்கள் என்றும், என்னை கார்த்திக் மற்றும் விஜயேந்திரனை கையால் மாறி மாறி கையால் அடித்தார்கள் என்றும்  சதாசிவம், முத்து என்கிற முத்துராஜ், சந்தோஷ்குமார், கார்த்திக் ஆகியோர் மீண்டும் என் அண்ணனை காரிலிருந்து வெளியே எடுக்க முயற்சித்தார்கள் என்றும் அப்போது கையில் கம்புடன் வந்த கென்னடி என்பவர் என் அண்ணனை கொல்லாமல் விடமாட்டேன் என்று பிரவீன்குமாரை அடிக்க வர அங்கிருந்தவர்கள் தடுத்தார்கள் என்றும் அழகேசன் அண்ணன் ராஜ்வ் காந்தி கென்னடி அண்ணன் மனோகரன், ஆகியோர் நின்றுகொண்டிருந்தார்கள் என்றும் பொதுமக்கள் அனைவரும்

ஒன்று கூடியிருந்த காவல் துறையினர் வருவதை கண்டு அங்கிருந்து தப்பி சென்றார்கள் என்றும், நான் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயகுமார் மற்றும் பிரவீன்குமாரையும் அனுப்பி வைத்தேன் என்றும் மற்றொரு 108 ஆம்புலன்சில் என் அம்மாவும், என் அண்ணன் என் அண்ணி தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சை கொண்டு வந்து என் அண்ணனை மட்டும் சேர்த்தார்கள் என்றும் என் அம்மாவிற்கும், என் அண்ணிக்கும் லேசான காயம் என்பதால் உள்நோயாளியாக சிகிச்சை சேரவில்லை என்றும் காயம் பட்ட ஜெயகுமார் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாகவும், எனக்கும், பாஸ்கரனுக்கும் காயம் ஏதும் இல்லாததால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லவில்லை என்றும், கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்

இல்லை.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.
(ஒப்பம்/ஜி.சுந்தரராஜன் B.Sc., B.L.,)

கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்